DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2025

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | பிரபாகரன் |
| Father / Husband Name | படவேட்டான் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேடந்தாங்கள் கிராமத்தில் வசித்து தனியார் மருத்துவமனையில் வேலை வருகிறேன். எதிரிகளை தெரியும். 01.05.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது எதிரி அண்ணாமலை எங்கள் வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் சொத்து பிரிக்கவேண்டும் என்று உன் ஆதார் கார்ட்டை கொடு என்று கேட்டார். என் அம்மா ஆதார் கார்ட்டை கொடுக்கமாட்டேன் என்று சொல்லவும், எதிரி அண்ணாமலை என் அம்மாவை அடித்துவிட்டு, இரு நான் என் அண்ணன் தம்பிகளை அழைத்துகொண்டு வருவதாக சொல்லி சென்றுவிட்டு மதியம் 12.00 மணிக்கு எதிரிகள் அண்ணாமலை, தயாளன், பூபாலன், தேவி, வீரராகவன் ஆகியோர் வீட்டிற்கு வந்து ஆதார் கார்ட்டை கேட்டு என் அம்மாவை எதிரி பூபாலனும் அண்ணாமலையும் செருப்பு மற்றும் கட்டையால் அடித்தார்கள்.

2. தயாளனும் கையால் என் அம்மாவை அடித்தார். எதிரி வீரராகவன் மற்றம் தயாளன் ஆதார் கார்ட்டை கொடு இல்லை என்றால் ஊரை விட்டு விரட்டிவிடுவேன், வீட்டை இடித்துவிடுவேன் என்று என் அம்மாவை மிரட்டினார். உங்களை காலி செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரித்தபோதும், என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விவங்களையும் மற்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்ற விவரத்தையும் போலிசார் விசாரணையில் சொன்னேன். போலிசார் என்னை 02 ம் தேதி மாலை 4.00 மணியளவில் என் வீட்டின் அருகே வந்து விசாரணை செய்தார்கள். புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேன். 1 முதல் 4 எதிரிகள் என்னுடைய தாய்மாமன்கள், 5ம் எதிரி என் சித்தி. சொத்து சம்மந்தமாக தகராறு ரொம்ப நாட்களாக உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் என்னுடைய அண்ணன், ஜோதி என்னுடைய அம்மா.

அவர்கள் அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2025

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | தனசேகர் |
| Father / Husband Name | விஸ்வநாதன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேடந்தாங்கள் கிராமத்தில் வசித்து கூலி வேலை வருகிறேன். சாட்சி சுப்புராயன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 03.05.2019 ம் தேதி காலை 7.00 மணிக்கு பரமசிவன் தெரு வழியாக நடந்து சென்றபோது மணிகண்டன் என்பவரின் வீட்டின் அருகே கூட்டமாக இருந்தார்கள், என்ன என்று பார்த்தபோது மணிகண்டனை எதிரிகள் அண்ணாமலையும் அவரது தம்பியும் அடித்தது சம்மந்தமாக போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. அந்த பார்வை மகஜரில் நானும் சுப்புராயனும் கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.